21st March 1959]

(ஆ) இது சம்பந்தமாக அகில இந்திய கைத்தறி போர்டுக்கும் மத்திய சர்க்கார், சென்னை சர்க்காருக்கும் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) With a view to extend the financial assistance available from the Cess Fund to weavers outside the co-operative fold this Government formulated and forwarded in 1956 to the All-India Handloom Board a scheme for the formation of 10 Co-operative Marketing Societies for the benefit of independent and small master weavers who had under their control not more than 10 looms. A loan of rupees twelve lakhs forty thousand and fifty (Rs. 12,40,050) and a grant of rupees sixty-six thousand five hundred and twenty only (Rs. 66,520) from the Cess Fund was applied for. In the meantime the Special Sub-Committee set up by the All-India Handloom Board to investigate the question of extending financial assistance from the Cess Fund to weavers outside the co-operative fold had submitted its report and the report was under the consideration of the Government of India. The All-India Handloom Board therefore returned the State Government's scheme unapproved stating that the Board could not consider the scheme pending the decision of the Government of India on the recommendations of the Special Sub-Committee. Subsequently the Government of India decided that in the interest of the proper development of the handloom industry the present policy of encouraging co-operative organisations should be continued. They also decided not to extend any form of financial assistance to handlooms which were outside the co-operative fold. In view of this firm policy decision of the Government of India, this Government could not take any further steps in the matter.

* 928 *Q.*—SRI S. NAGARAJA MONIGAR (on behalf of SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கூட்டுறவு சங்கங்களில் சேராத தனிப்பட்ட நெசவாளர்களுக்கு தறிக் கருவிகள் வழங்கவும், தொழில் வளர்ச்சிக்கு செஸ் நிதியிலிருந்து நீண்ட கால கடன் வசதி கொடுக்கவும் திட்டம் ஏதாவது சர்க்காரிடம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், நமது கூட்டுறவு இலாக்கா நாளுக்கு நாள் அதிகமாக வேலைசெய்து கூட்டுறவு சங்கங்களை எல்லாம் பெருக்குவதற்கு வேலை செய்தும், அதிகமாக நெசவாளர்கள் எல்லாம் கூட்டுறவு சங்கத்தில் சேரவில்லை என்று தெரிகிறது. இம்மாதிரி கூட்டுறவு சங்கத்தில் சேராத நெசவாளர்கள் வெளியே இருந்து கொண்டு இம்மாதிரியான வசதிகள் எல்லாம் வேண்டும் என்று கேட்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய புள்ளிவிவரம் தவறு என்பதை முதலில் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு 40 சதவிகிதம் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்துவிட்டால்கூட இப்போது திடீரென்று சர்க்காரால் எல்லோருக்கும் வசதி செய்து கொடுக்க முடியாது. ஒரு " பேஸ்ட் ப்ரோகிராம் " மூலமாகத்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்

[21st March 1959

50 சதவிகிதம் நெசவாளர்களை சேர்த்து விடவேண்டும் என்பதுதான் இப்போதுள்ள திட்டம். எல்லோரும் இப்போது சேர்ந்துவிட்டால்கூட எல்லோருக்கும் வேண்டிய வசதிகளை செய்து கொடுத்துவிடமுடியாது. இருந்தாலும் அதிகமாக நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் சேரவில்லை என்று சொல்வது சரியான புள்ளி விவரம் அல்ல அது தவறு, என்பதையும் சொல்லிகொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : ஸார், கைத்தறி நெசவாளர்களுக்கு புது மாதிரியான தறிகள் வாங்கவேண்டுமென்று சென்ற ஆண்டில் 5·58 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தும், அதில் மிச்சமாக 5·41 லட்சம் ரூபாய் இருப்பதாக தெரிகிறது. இதிலிருந்து 17 ஆயிரம் ரூபாய்தான் செலவு செய்திருப்பதாக தெரிகிறது. ஏனென்றால் சர்க்காரிலிருந்து உதவி கொடுத்தாலும் புது விதமான தறிகளை அமைக்கவேண்டுமானால் கூடுதலாக 150 ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்களே தெரிவித்தார்கள். ஆகவே அந்த 150 ரூபாயும் சேர்த்து கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நேற்று இதைப்பற்றி முழுக்க முழுக்க விவாதம் நடந்தது. சர்க்கார் புதுமாதிரியான உபகரணங்கள் வாங்கி கொடுத்தால் கூட அதை நெசவாளர்கள் ஏற்றுக்கொள்ளாமல் பழைய முறைகளையே ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நிலையில் நேற்று கனம் அங்கத்தினர் மாரியப்பன் அவர்கள் சொன்னது மாதிரி இப்போதிருப்பதை அதிகப்படுத்தி 200 ரூபாயாக கொடுத்தாலும், இந்த ரூபாய்க்கும் புது உபகரணங்களை வாங்கி மூலையில்தான் போட வேண்டிய நிலை ஏற்படுமோ என்று நான் நினைக்கிறேன்.

MR. SPEAKER : நானும்கூட நினைக்கிறேன், நேற்றுதான் இதைப்பற்றி அதிகமான அளவில் விவாதம் நடத்தியாய் விட்டதே, இப்போது அதன் பேரில் அதிகமான உபகேள்விகள் கேட்பதின் அவசியம் என்னவென்று தெரியவில்லை. (சிரிப்பு)

Sugarcane

* 929 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the basis on which the price of sugarcane is fixed for supply to the sugar factories in Pugalur and Pettavaithalai in Tiruchirappalli district; and

(*b*) whether there is any proposal to review the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The minimum price of sugarcane to be paid by the sugar factories for the sugarcane purchased by them is fixed by the Government of India.

(*b*) A proposal for revision is under consideration.

SRI A. GOVINDASAMY : இப்போது கரும்பின் விலையை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் மத்திய சர்க்காரின் கையில் இருந்து வருவதால் நமது நாட்டில் உற்பத்தியாகின்ற கரும்புக்கு உற்பத்தி சிலவு அளவுக்கு போதுமான விலை கிடைக்காமல் கரும்பு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? ஆகவே ராஜ்ய சர்க்காரே இந்த விலை நிர்ணயம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?